# கருவறைக் காதல்

## (கவிதைகள்)



**மலீஸ் அமீன்**

வெளியீடு:
பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டம்,
இலங்கை.

# கருவறைக் காதல்

*(கவிதைகள்)*


## மலீஸ் அமீன்



*வெளியீடு :*

*பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டம்*

*இலங்கை*

**கருவறைக் காதல்**
**மலீஸ் அமீன்**
**கவிதைகள்**
**பைத்துல் ஹெல்ப்**
**நண்பர்கள் வட்டம் வெளியீடு**

**Karuvarai Kathal**
Malees Ameen
(Poems)

© **Author**
A.A.M. Malees

454, Zam Zam Road
Maruthamunai-03
Kalmunai
Sri Lanka
E-mail - ameenmalees@gmail.com
Mobile : +94772788950
Whatsapp : +94772788950
Facebook: Malees Ameen

**Type Set :**
M.N.Mohamed Naajith

**Cover Design & Layout :**
M.N. Satheel Mohamed (Kidzmate)

**Printed by :**
Kidzmate - Maruthamunai

Page : 62

Price : 500/-

**ISBN :**
978-624-98342-1-7

***எனது உடன் பிறந்த***
***தங்கைகள்***
***இருவருக்கும்***

## **என்றும் நன்றி பூத்தூவல்கள்**

*கவிஞர் : மருதமுனை முனாஸ்*
*கவிஞர் : எம்.எம்.விஜிலி (B.A,ஆசிரியர்)*
*கவிஞர் : எஸ்.ஏ. கப்பார் (வெண்ணிலா ஆசிரியர்)*
*கவிதாயினி : அ. சுமதிமணி (தென்காசி),*
*தமிழ்நாடு, இந்தியா*
*கவிதாயினி : கமலாதேவிதனபாலன் (காரைக்குடி),*
*தமிழ்நாடு, இந்தியா*
*மு.ந. சதீல் அஹமட் (Kidzmate)*
*எம்.என்.எம். நாஜித் (B.A. Hons.)*
*எம்.எச். றைசுல் ஹக்கீம் (JP) - (BHOFR)*
*ஏ.சீ.எம். அஸாத் (தலைவர்)*
*(யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகம்)*
*எஸ்.எம்.ஆர். அமினுத்தீன் (BA , நூலகர்)*
*களுவாஞ்சிகுடி*
*கவிஞர் : எம்.ஜே.ஜவ்சன்அஹமட் (கவிப்பொய்கை)*
*ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை ஆசிரியர் குழு)*

**மலீஸ் அமீன் கவிதைகள்**

*மலீன் அமீன் அவர்களின் “கருவறைக் காதல்” என்ற கவிதை தொகுப்பை காண்கையில் ஓர் உள்ளோட்டம் இருப்பதாகவே படுகின்றது.*

*இத்தொகுப்பில் 30 கவிதைகள் அடக்கம் பெறுகின்றன. இவைகள் காதல், அன்பு, ஏக்கம், தவிப்பு, சமூக சீர்கேடுகள் போன்றவைகளைப் பாடுகின்றன.*

*ஒற்றை வாசிப்பில் மனதில் பதியும்படி புதுக் கவிதையின் படிமம் வாசிப்பின் இலகு நடைகள் கையாளப்பட்டிருப்பது பெருமிதம் தருகின்றது. வாசகர்களுக்கும் பேரன்பைத் தழுவி நிற்கும் என்பது என் நம்பிக்கை. அவசரமில்லாமல் நகர்ந்து செல்லும் கவிதைகள் முற்போக்குக்கு தன் இருப்பைத் தக்கவைத்து தன் திசைக்கெதிரான பாதையில் ஆர்ப்பாட்டமில்லாமல் பயணிக்கின்றன.*

*“அன்பானவர்கள்” என்ற கவிதையை வாசிக்கும் போது மனட்சாட்சியை சீர்செய்ய வேண்டிய தாயிற்று....*

*எதிரிகளின் நினைவுகளை*
*மனதின் அழுக்குகளாக*
*வைத்துக் கொள்வதில்*
*என்ன பயன்*

சமூக மாற்றத்தை காணத்துடிக்கும் தியாகப் போக்கு விட்டுக் கொடுக்கும் தன்மைகள், மன்னிக்கும் மனப்பாங்குகள் கவிஞரின் உள்ளுணர்வின் வெளிப்பாடுகளை சித்தரிக்கின்றன.

வலியின் வலிகளுக்குள் மானிடங்களின் இனிய காலம் அழிந்து போவதை "மனிதாபிமானம்" என்ற கவிதை மூலமாக கவிஞர் தொட்டுச் செல்கிறார்.

மனிதாபிமானமற்ற
இவ் உலகில் வலிகள்
பொதுவானதுதான் ஆனால்,
ஒவ்வொருவரும் உணரும்
போதுதான் வலிகள்
வலிக்கின்றது

காயங்களின் கீறல் இக்கவிதை சுமை தாங்கிச் செல்கின்றன. கவிதை உணர்வு மட்டுமல்ல அநீதிகளை ஜீரணிக்க முடியாமல் ஒரு கொதி நிலையில் கவிஞரின் ஆதங்கம் தனது படைப்புக்களை கருகூலமாக்கியிருக்கின்றது. ஒரு விடியலின் செஞ்சூரியனுக்காய் புதுயுகம் படைக்கும் என எண்ணத் தோன்றுகின்றது.

கவிஞர் மலீஸ் அமீன் "மண்ணில் உதிராத பூக்கள்" கவிதைகள் நூலின் மூலம் நமக்கெல்லாம் அறிமுகமானவர்.

அவரின் இரண்டாவது தொகுப்பு "கருவறைக் காதல்" கவிதை நூலை முடிந்தவரை தந்திருக்கின்றார். இன்னும் நயம் கானும் பல படைப்புக்களை ஒருநாள் தருவார் என்ற நம்பிக்கை ஆணிவேராய் உறைந்து போகின்றது.

காதல் மகத்துவம் கால வரலாறு "அவளின் பாதங்கள்" என்ற கவிதை

தொலைந்த அவளின்
நினைவுகளை மீட்பதற்கு
அவளின் பாதங்களின்
சுவடுகளை
கடற்கரை மணலினிலே
கண்கள் தேடிக் கொண்டிருக்கின்றது

ஆழமான அன்பை தடவி உயரப் பறக்கின்றது இந்த வரிகள்.

இலக்கிய உலகிற்குள் சென்று கவிதைகளை இனங்கண்டு எழுத முற்படும் ஓர் அதிர்வு கவிஞரில் சரிந்திருப்பதை உணர முடிகின்றது. நவீன படைப்புக்களை கவிஞர் "மலீஸ் அமீன்" அவர்கள் முன்னெடுக்கும் போது அவரின் கவிதைகள் இன்றும் நயம் காணும்.

*தன் கவிதை தொகுப்புக்கு முன்னுரை எழுதும் வாய்ப்பை எனக்களித்த நண்பருக்கு நன்றி.*

*என்றும் வாழ்த்துக்கள்*
*ஆசிகள்*
*இப்படிக்கு!*
*கவிஞர்*
*மருதமுனை முனாஸ்*
***2022.08.10***

# அணிந்துரை

*நவீன இளம் கவிஞர்களுள் தன்னை தொடர்ந்து அடையாளப்படுத்திக் கொண்டிருப்பவர் மருதமுனை கிராமத்தில் பிறந்த கவிஞர் "மலீஸ் அமீன்" இலகு நடையில் கவிதைகளை எழுதி வரும் இவருடைய கவிதைகள் (காதல், நட்பு, பாசம், வறுமை) போன்ற இயற்கை மனித சமூக பிரச்சினைகளை கொண்டு புனையப்பட்டுள்ளது.*

*மிக அண்மைக் காலமாக கவிஞர் "மலீஸ் அமீன்" கவிதை நூல்களை வெளியிடுவதில் ஆர்வம் காட்டுவது பாராட்டத்தக்கது. அதுமட்டுமல்லாமல் அவரை ஊக்கப்படுத்தும் நிலையிலும் எமது அமைப்பு அவருக்கு கடமைப்பட்டுள்ளது.*

*அதனால்தான், எமது அமைப்பின் மூலமாக (பைத்துல் ஹெல்ப் ஓஹநேசன் (பேர்ா) றிலீப் ஊடாக "பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டம்" இவரது கவிதை நூல்களை வெளியிடுவதற்கு பங்களிப்புக்களை வழங்கி வருகிறது. இவரது முதலாவது படைப்பான "மண்ணில் உதிராத பூக்கள்" எனும் கவிதை நூலினை எமது அமைப்பு வெளியிட்டிருந்தது கடந்த (2021) வருடத்தில். அதேபோல் இவரது இந்த இரண்டாவது கவிதை நூலான (கருவறைக் காதல்) இவ்வருடம் (2022)இல் வெளியிடப்படுகின்றது.*

இது மட்டுமல்லாமல் சமூக சேவையிலும் தன்னை ஈடுபடுத்தி பல சேவைகளை தனிமனிதனாக நின்றும், எங்கள் அமைப்பில் இருந்து கொண்டும் (ஒருங்கிணைப்பாளராக) செய்து வருகின்றார்.

புதிய தலைமுறை கவிஞரான மலீஸ் அமீனின் கருவறைக் காதல் கவிதை நூலை வெளியீடுவதில் எமது அமைப்பும், நானும் பெருமிதம் அடைகின்றோம்.

இலக்கிய துறையில் இவர் பல சாதனைகளையும், விருதுகளையும் பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாராட்டுக்களுடன்
எம்.எச். றைசுல் ஹக்கீம் (JP)
தலைவர்
பைத்துல் ஹெல்ப் ஓஹநேசன்
(பேர்ா) றிலீப், (BHOFR)
இலங்கை
2022.06.16

## என்னுரை

*எனது இரண்டாவது நூலான "கருவறைக் காதல்" கவிதை தொகுதியை இவ்வாண்டில் (2022) வெளியிடுவதற்கு நம்பிக்கை தந்த இறைவனுக்கும், உற்சாகப்படுத்திய இலக்கிய நண்பர்கள் மற்றும் ரசிகர்கள் அத்துடன் எமது "பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டம்" உறுப்பினர்களுக்கும், தலைவர் எம்.எச் றைசுல் ஹக்கீம் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*கவிஞர், வெண்நிலா ஆசிரியர் எஸ்.ஏ. கப்பார் அவர்கள் எனது கவிதை நூல்கள் வெளிவர வேண்டும் என ஆசைப்படுபவர்களில் ஒருவர். காணும் போதெல்லாம் "எழுதுகின்ற வயதும் காலமும் இதுதான் நம்பிக்கையோடு எழுதுங்கள்" என்று என்னை உற்சாகப்படுத்துபவர்.*

*அதேபோல் ஆசிரியர் கவிஞர் எம்.எம்.விஜிலி அவர்களுக்கும், முன்னுரை வழங்கிய கவிஞர் எழுத்தாளர் மருதமுனை முனாஸ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தவனாக. முக்கியமாக, இந்தியாவின் (தமிழ் நாடு) தென்காசியை பிறப்பிடமாகக் கொண்ட புகழ் பெற்ற எழுத்தாளர் கவிதாயினி, "சுமதி மணி" அவர்கள் என்னுடைய இந்த நூலுக்கு வாழ்த்துக்கள் வழங்கி இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*அவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.*

*இந்த நூலை கவர்ச்சியான அட்டைப் படத்தோடு சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிய நண்பர் மு.ந.சதீல் (Kidzmate) அவர்களுக்கும், எழுத்து வடிவமைத்த நண்பர் எம்.என்.எம்.நாஜித் அவர்களுக்கும் "பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டம்" வெளியீட்டகத்திற்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*எனது கவிதைகளை வார இதழ்கள் சஞ்சிகைகளில் பிரசுரித்து வரும் இலங்கை, இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் எனது இலக்கிய வாழ்விற்கு உறுதுணையாக இருக்கும் எனது அன்பு நண்பர்கள், மருமக்கள், எனது குடும்ப உறுப்பினர்கள், முக்கியமாக எனது அன்புத் தாய் "ஆயிஷாறாவ்" அவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.*

*எனது இந்த "கருவறைக் காதல்" கவிதை நூலை படித்துவிட்டு உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவிப்பதை வரவேற்றவனாக.*

*அன்புடன்*
*மலீஸ் அமீன்*
*"ஒருங்கிணைப்பாளர்"*
*பைத்துல் ஹெல்ப் ஓஹநேசன்*
*(பேர்ா) றிலீப், (BHOFR)*
*இலங்கை*
***2022.07.18***

**உள்ளே........**


☞ எதிர்கால கற்பனை 24
☞ ஓசைகள் 25
☞ விமர்சனம் 26
☞ அன்பானவர்கள் 28
☞ என் தேடல் அவள் 29
☞ என்ன 30
☞ மனிதாபிமானம் 31
☞ வறுமை 32
☞ சிறு மழைத்துளி 33
☞ என் இதயம் 34
☞ அவளின் பாதங்கள் 35
☞ உன் கனவுகளோடு 36
☞ அன்னையை மறவாதே 37
☞ கல்லூரி தோழி 38
☞ ஏமாற்றம் 39
☞ விடியாத இரவுகள் 40
☞ நிஜமான கனவுகள் 41
☞ தர்மம் 42
☞ எனது மடல் 43
☞ இறுதி பக்கத்தில் நான் 45
☞ மார்கழி பனி 47
☞ கருவறைக் காதல் 58
☞ ரயில் பயணம் 50
☞ வாழைமரம் 52
☞ நீர் 54
☞ தேசம் 55
☞ வாலிபம் 57
☞ உயிர் உள்ளவரை 58
☞ தனிமரம் 60
☞ தாரம் 61

**எதிர்கால கற்பனை**

*இறந்த காலத்தின்*
*அற்புதமான*
*அனுபவத்தில் வந்த*
*ஒரு அறிவு சாயலில்*
*விதிகளில் வித்திட்ட*
*இந்த இளமை*

*காளையாக இருந்த*
*காலமும்*
*கன்னியரை கைபிடிக்க*
*எண்ணிய மனமும்*
*எதிர்கால கற்பனையில்*
*மூழ்கடித்திருந்தது....!*
*தவிர*
*வாழ்க்கையின் அடுத்த*
*கட்ட நகர்வுகளை*
*உரசிப் பார்க்கவில்லை*
*இருந்தாலும்*
*விதியின் வழியே*
*வாழ்க்கை என்பதினால்*
*மனதை தேற்றியவனாக*
*வாழ்க்கை*
*சக்கரத்தில்*
*இன்று.......!*

## ஓசைகள்

அந்திப் பொழுதில்
பறவைகளின் ஓசைகளிலும்,
சூரியனின் அஸ்த்தமனத்திலும்
மனம் ஒரு வகையான
பிரமிப்பை வெளிப்படுத்தியது
வேப்பமரத்தின் இலைகளில்
அசையும் அந்த
மெல்லிய காற்றில்
என்
மனம் எங்கோ
ஒரு மூலையில் ஏதோ
ஒன்றை நினைக்கிறது
மஸ்ஜிதின் அதானும்,
கோயிலின் மணி ஓசையும்
இடைமறித்து கடவுளின்
ஞாபகத்தை ஒருமுறை
ஞாபகமூட்டுகிறது
ஏதோ ஒன்றை இழந்தவனாக
அந்த குளக் கரையை
விட்டு அகன்று
வீடு செல்லப் புறப்படுகிறேன்
இழப்பு என்பது
நிமிடங்களில் தான்
செதுக்கப்பட்டுள்ளது.

## விமர்சனம்

விமர்சனத்தைக் கண்டு
அஞ்சுவதற்கும்,
அழுவதற்கும்
எனக்குத் தெரியாது
ஏனென்றால்,
நான் அதைக் கற்றுக்
கொள்ளவில்லை

இன்னொருவரை
விமர்சனம் செய்து
பழக்கமும் இல்லை
அது, வலியை
ஏற்படுத்தும் என்கிறார்கள்
நான் ஒரு போதும்
அவ்வாறான வலியை
உணர்ந்ததும் இல்லை
இருந்த போதும்,
உங்களுக்கு ஒன்றைக்
கூறுவேன்
தலைக்கனம் தலைக்கு
ஏறினால்
நீங்கள் பெற்ற
மகுடம் கூட
உங்களை மதிக்காது

*விமர்சனம் என்பது*
*வீம்பர்களின்*
*இயலாமையின் வெளிப்பாடே...!*

## அன்பானவர்கள்

*எதிரிகளின் நினைவுகளை*
*மனதின் அழுக்குகளாக*
*வைத்துக் கொள்வதில்*
*என்ன பயன்*
*இதே,*
*எதிரிகள் தான்*
*இறந்த காலத்தில்*
*நம் அன்பானவர்களாக*
*இருந்தவர்கள் என்பதினை*
*மறந்து விட்டு....!*
*கால மாற்றங்கள்*
*துரோகிகளையும்*
*மன்னித்துவிடும்.*

## என் தேடல் அவள்

*என் தேடல் அவள்தானே...!*
*தடுமாறும் போதும்*
*தாங்கும்*
*உந்தன் அன்பு...!*
*தனிமையின் போது*
*அரவணைக்கும்*
*உந்தன் அன்பு...!*
*என் வாழ்வில்*
*நீ போதும்...!*
*உன்னை என்*
*மனம் தேடுதே...!*
*அன்பே*
*வருவாய் இங்கே...!*
*என் இதயம்*
*அருகில்*
*அமர்வாய் நன்றே...!*
*தினம் தோறும்*
*பல இலட்சம்*
*கனவுகள் தோன்றிடுமே...!*
*நீயின்றி என் வாழ்வு*
*இருள் சூழ்ந்திடுமே...!*
*வலியான உன்னை*
*நான் தினம் நினைக்கையில்*
*என் உள்ளம்*
*உயிரற்ற உணர்வாகின்றது.*

## என்ன

ஒரு மூடனின்
கை ரேகையினால்
நீங்கள் சாதித்தது
என்ன...!
ஒரு பைத்தியகாரனை
நீங்கள் பகிடிவதை
செய்வதினால்
கொண்ட மகிழ்ச்சி
என்ன...!
ஒரு ஏழையின் பசிக்கு
உணவளிக்காமல்
நீங்கள் கொண்ட செல்வம்
என்ன...!
இவ்வாறான "என்ன"
உங்கள் உள்ளங்களில்
ஆழத்தில் இருந்து வந்தாக
வேண்டும்
மனதால் தாயானாள்
அகிலமே அரவணைக்கும்
நாளை உன்னை
"என்ன" என்பது
நம் அன்பினால்
உருவாக்கப்பட வேண்டும்.

**மனிதாபிமானம்**

*மனிதாபிமானம்*
*அற்ற*
*இவ் உலகில்*
*வலிகள் பொதுவானதுதான்...!*
*ஆனால்,*
*ஒவ்வொருவரும்*
*உணரும் போதுதான்*
*வலிகள் வலிக்கிறது...!*
*வாழ்க்கை கனவுகளின்*
*போது,*
*ஏற்படும் தோல்விகளின்*
*வலியே,*
*வாழ்க்கையின் பெரும்*
*வலியாகும்...!*
*அது, துரோகத்தின்*
*வெளிப்பாடாகவும்*
*பல நேரங்களில்*
*உணரப்படுகிறது.*

**வறுமை**

*எமது விலா எலும்புகளில்
வறுமை ஊஞ்சல்
ஆடத் தொடங்கிவிட்டது
ஒரு அழகுரல்
இன்று பல
அழுகுரலாக மாறிவிட்டது...!
ஆனாலும்,
இன்று எமது பேச்சுப்பொருள்
கிடைத்தது, கிடைக்கவில்லை
கிடைத்தவன் வென்றுவிட்டான்
கிடைக்காதவன் தோற்றுவிட்டான்
எம் மனநிலை அவ்வளவுதான்...!
உலகத்தில் மற்றைய
மனிதர்களை இந்த
மனநிலைக்கு ஒருபோதும்
நான் ஒப்பிடவில்லை
காரண சூத்திர தன்மைக்கும்,
இயற்கையின் விதிகளின்
தன்மைக்கும்
எம்மை நாம்
மாற்றாவிட்டால்
எம் வாழ்விடங்களில்
நாம் தோல்வி அடைந்தே
வாழ்நாளைக் கழித்திடுவோம்.*

## சிறு மழைத்துளி

இந்த சிறு
மழைத்துளியில்
இறுக்கப் பிடித்தபடி
மறைந்திருக்கிறது
பெரும் வனம்...!
எச்சத் துளிகளின்
உயிர் காற்றாக
வலம் வருகிறது
அவளின் நீண்ட
அன்பின் அடையாளம்...!
காலத்தின் தேவை
இரண்டுதான்
வாழ்தல், மடிதல்
கற்பனைக்கு எட்டாத
இல் உலகில்
காதலும் அவ்வாறே
இதற்கு விதியின்
அற்புதங்களும்
விளையாட்டாக...!
இறுதி என்பது
காயப்பட்ட
இதயமாகவே கடைசி
வரை செல்கின்றது.

## என் இதயம்

*நீ மறைத்து வைத்த*
*உன் நினைவில்*
*நான் இருந்ததை - அன்பே*
*யார் அறிவாரோ*
*உன் புன்னகை*
*சொன்னதெல்லாம்*
*என் மீது உன்*
*அன்பை மட்டும் தான்...!*
*உன் விழிகள்*
*சொன்னதெல்லாம்*
*என் மீது உன் பாசத்தை*
*மட்டும்தான்...!*
*ஆனால், என் இதயமோ*
*உன் நாமத்தை*
*மட்டும்தான் சுவாசிக்கின்றது*

## அவளின் பாதங்கள்

தொலைந்த அவளின்
நினைவுகளை மீட்பதற்கு
அவளின் பாதங்களின்
சுவடுகளை
கடற்கரை மணலினிலே
என் கண்கள்
தேடிக் கொண்டிருக்கின்றது.
அன்று, நானும்
அவளும்
கடலை வாங்கிய
அந்த சிறுவன்
அங்கே நிற்கின்றான்.
அவனிடம் நான்
கேட்கின்றேன்
என்னவளின் கால்
பாதங்களின் சுவடுகளை
கண்டாயா என்று...!
காதல் என்பது
இப்படியுமா என்று
அந்த சிறுவனின்
மனதில் எழும் கேள்வி
எனக்குப் புரிகின்றது
இது,
நினைவலைகளின்
அழியாத சுவடுகள்

## உன் கனவுகளோடு

உன்னை நான்
ஏற்றி வைத்தேன்
உறங்காத விழி இரண்டால்...!
காத்திருப்பேன் காலமெல்லாம்
கல்லறையில் கூட
உன்
கனவோடுதான் கண் உறங்குவேன்
கடந்து விட்ட காலத்தை
கண்ணீரோடு மீட்கிறேன்
மறக்க முடியுமா - என்னால்
உன்னை மறந்து விட்ட
நிஜங்களை எண்ணி...!
அந்த நினைவுகளை
தூக்கத்தில் கூட மறவேன்
சுகமான அந்த நினைவுகளை
சுமையாக மனதில் சுமக்கிறேன்.
உன்னை பற்றிய
கனவுகளோடு...!

**அன்னையை மறவாதே**

*நீ உன்னை மறந்தாலும்*
*நீ உண்ண மறந்தாலும்*
*நீ உன் அன்னையை மறவாதே...!*

*நீ காதலை பிரிந்தாலும்*
*நீ உன் துணையை பிரிந்தாலும்*
*நீ உன் அன்னையை பிரிந்திடாதே...!*

*நீ படிப்பை இழந்தாலும்*
*நீ பட்டத்தை இழந்தாலும்*
*நீ உன் அன்னையை இழந்திடாதே...!*

*நீ சொத்தை இழந்தாலும்*
*நீ சுகத்தை இழந்தாலும்*
*நீ உன் அன்னையை இழந்திடாதே...!*

*அன்னையே உன் சுவர்க்கம்*
*அவளே உன் உலகம்.*

## கல்லூரி தோழி

*தோழி நீயே*
*என் கல்லூரித் தாய்*
*இன்று பிரியும்*
*வேளையிலும் என்னை*
*அன்பாக அழ வைத்தவளே...!*
*கொட்டும் மழையில்*
*ஒன்றாக நாம்*
*நனைந்த நாட்கள்*
*மீண்டும் ஒருமுறை*
*வருமா நம்*
*வாழ்க்கையில்...!*
*ஒரு பார்வையில்*
*ஓராயிரம் கதை சொல்லும்*
*எங்கள் நட்பு...!*

*உயிர் கூட சொல்லாமல்*
*போய் விடும்,*
*தோழியே...!*
*உன் நட்பு மட்டும்*
*என் கல்லறையிலும்*
*கலந்திருக்கும்*
*நான் நட்பை சுவாசிக்கிறேன்*
*அதனால், எங்களுக்கு*
*பிரிவே இல்லை...!*

**ஏமாற்றம்**

ஏமாற்றந்தான்
என் வாழ்க்கையின்
சோகக் கீதங்கள்

அன்பான வார்த்தைகளால்
மனம் குளிர பேசினார்கள்
பின் நாட்களில் ஏமாற்றம்
என்பதினை மட்டுமே
கொடுத்து விட்டார்கள் எனக்கு.

காலநிலை மாற்றங்கள் போல்
திடீரென மாறிக் கொள்கிறார்கள்
இழிவான வார்த்தைகளைக் கொண்டு
என்னை தூற்றுகிறார்கள்.

எல்லாம் தருவதாக அழைத்துச்
செல்கிறார்கள்
ஆனால், இடையில்
ஒழிந்து கொள்கிறார்கள்.
மகிழ்ச்சியை பறித்து விட்டு
நடுத் தெருவில் விட்டு விட்டார்கள்.

## விடியாத இரவுகள்

*இரவுகள் இன்னும்*
*விடியவில்லை...!*
*பூமியில் மக்களின்*
*துயரும் மாறவில்லை...!*
*வானவில் தோன்றி*
*மறைவது போல்*
*மகிழ்ச்சி தடுமாறி*
*வந்து போகின்றது.*
*பூக்களில் வண்டுகள்*
*தேன் குடித்து*
*இன்னும் பசி ஆறவில்லை.*
*இயற்கையை நாம்*
*இன்னும் நேசிக்கவில்லை.*
*எமக்கு இன்னும்*
*நல்ல காலம் பிறக்கவில்லை.*
*பேராசை பிடித்து*
*பூமியில் அலைகின்றோம்.*
*மரணத்தை எண்ணி*
*ஒரு நொடி தானும் நினைக்கிறோமா...!*

## நிஜமான கனவுகள்

கனவுகளுக்கும், வெற்றிகளுக்கும்
இடையில் ஊஞ்சல் ஆடும்
மனது...!
ஏமாற்றங்களுக்கும், துரோகங்களுக்கும்
இடையில்
சோர்ந்து போகும்
வயது...!
பாசத்திற்கு அதிகமாக
ஏமாந்து போகும்
மனிதர்கள்...!
கண்ணீரை மட்டும் தந்துவிட்டு
பிரிந்து செல்லும்
உறவு...!
எங்கோ ஒருவரை
நம்பி ஏமாந்து நிற்கும்
இதயம்...!
கண் மூடினால் தெரியும்
கனவுகளை நிஜமென்று
நம்பும் வாழ்க்கை...!
அன்பான காதலை தவறாமல்
திருப்பி வாங்கும்
ஒரு இதயம்
இவ்வளவுதான் வாழ்க்கை.

## தர்மம்

இந்த வாழ்க்கை
கொஞ்ச காலம்தான்
இதயமே நினை...!

நம்பினவர்கள் நழுவிப் போய்விடலாம்
சேர்த்து வைத்த
சொத்தும்
அழிந்திடலாம்...!

அண்ணன் தங்கை
உறவு முறிந்திடலாம்
நட்புக் கூட
பிரிந்து சென்றிடலாம்.

நீ செய்த தர்மம்
அது, உன்னைக் காத்திடுமே
இது, இயற்கையின் உன்னத
போதனையே...!

## எனது மடல்

எனது மருமக்களுக்கு
ஒரு மடல்
இந்த உலகில்
இறைவன் அழித்த
சொர்க்கம் நீங்களே...!

பாசாங்கு இல்லாத
பாசம்
பார்க்காமல் பரிதவிக்கிறேன்
குளிர் நாட்டு தேசத்தில்

மருமக்களே...!
பாசம் இல்லாமல்
குளிர் நாட்டு தேசத்தில்
இருக்கின்றேன்
என்று நினைக்காதீர்கள்.
ஏக்கங்கள் ஏராளம்
யாரும் இல்லாமல்
ஆறுதலுக்கு கண்ணீர் விட்டு
வருடங்கள் பல ஆகின்றன.
வெளிநாடு என்று பெயர்
மட்டும் தான்
பாசம் இல்லாமல்
நாசம் ஆகின்றேன்.

*நான் சிந்திய*
*கண்ணீரில்*
*பனி நாடும்*
*கண்ணீரால்*
*உருகியதே...!*

*தொலைதூரம்*
*இருந்தாலும்*
*என்னுடைய*
*பாசம்*
*என்றுமே*
*குறையாது*
*மருமக்களே!*

## இறுதி பக்கத்தில் நான்

உன் இதயம் பேசுகின்றேன்
பேனா கொண்டு ஏதேனும்
எழுத எண்ணுகின்றேன்.
நீ அன்பைத் தந்தாள்
நான் என்னைத் தருகிறேன்.
நீ கேள்வி தந்தாள்
நான் விடை தருகிறேன்.
ஆனாலும்,

கோடிக் கணக்கான,
கேள்விகள் சேகரித்து
வைத்துள்ளேன் என்றாய்...!
உன் கோடான கோடி
கேள்விகளுக்கும் நான்
பதில் தருவேன் என்றேன்...!
இந்த உலகில் என்னைப் பற்றி
சிந்திப்பவர் யாரும் இல்லை
என்றாய்...!
என் இதயம் எங்கும்
உன் சிந்தனையே என்றேன்.
உறவுகளின் பிரிவால்
கலங்குகிறாய் என்றாய்
என் ஆயுள் வரை
உன்னுடன் இருப்பேன் என்றேன்.

*ஏதோ ஒருநாள் நீயும்*
*என்னை பிரிந்து செல்வாய்*
*என்றாய்...!*
*என் பிரிவு*
*உன் மரணம் என்பதை*
*புரியாமலேயே...!*
*இப்படிக்கு உன் காதலன்.*

## மார்கழிப் பனி

*மார்கழிப் பனியைப் போல்*
*என் உடம்புக்குள்*
*புகுந்தவளே...!*
*மார்கழி குளிரும்*
*என் உடலை வருத்தவில்லை.*
*என் உடம்பில்*
*நீ இருப்பதால்...!*
*இந்த காதல்*
*சுகமானது*
*அதை நீ வரமாக தந்தது.*

*சின்ன சின்ன*
*அழகான தருணங்கள்*
*அனைத்தையும் சேகரிக்கின்றேன்.*
*உன்னை மட்டும்*
*பனிப்போல் ரசித்திட*
*அன்பே,*
*உன்னை மறக்க நினைப்பது*
*நான் இறப்பதற்கு சமம்.*

## கருவறைக் காதல்

*உன் கருவில் நான்*
*தோன்றினேன்*
*ஒரு மகனாய்...!*
*உன் வயிற்றில்*
*என்னையும்*
*வாழ்க்கையில்*
*கஷ்டங்களையும்*
*சுமந்து நின்றாய்...!*
*வீட்டில் உள்ள*
*உடன் பிறப்புக்களையும்*
*சமமாகப் பார்த்து*
*பாசத்தினைப் பங்கிட்டாய்*
*ஒரு தாயாய்*
*என் மகிழ்ச்சிக்காக*
*உன் கஷ்டங்களை மறைத்தாய்*

*என் வாழ்க்கை பாதையில்*
*முன்னேறுவதற்காக*
*நிறைய தியாகங்கள் செய்தாய்*
*எத்தனை முறை என் மீது*
*கோபம் கொண்டாலும்*
*உன் பாசத்தைக் காட்ட*
*ஒரு போதும் நீ தவறுவதில்லை.*

நான் வாழ்வில் எவ்வளவு
முன்னேறிச் சென்றாலும்
உன் பிள்ளை என்று
சொல்வேன் கம்பீரமாய்...!
அம்மா என்ற நம்பிக்கை
அவள் “கருவறைக் காதலாக”
தந்த என் உயிர்.

## ரயில் பயணம்

ரயிலில் கிடைக்கும்
அனுபவங்கள் வாழ்க்கையின்
மிக பெரிய பாதைகளை
உருவாக்கும்...!
தண்டவாளத்தைப் போல
வாழ்க்கைப் பாதையும்
பெரிதாக இருக்குமோ...!
ரயிலில் நாம் பயணம்
செய்யும் போது
எத்தனை வகையான
மனிதர்களை சந்திக்கின்றோம்.

ஒரு அமைதியான பயணத்தில்
இயற்கை எல்லாவற்றையும்
சந்தித்து செல்கின்றோம்.
பலபேர் காதல்கள் ரயில் பயணத்தில்தான்
சேர்ந்திருக்கு...!
பல காதல்கள் ஜெயித்திருக்கு

பலரோடு வாழ்க்கையும் இந்த
ரயில் பயணத்தில்தான்
தொடங்கியும் இருக்கு

எத்தனையோ கவிஞர்கள்,
எழுத்தாளர்கள், பாடகர்கள் ரயில்
பயணத்தின் போது
உருவாகி இருக்கிறார்கள்.
இந்த ரயில் பயணத்திற்கு
அனுபவங்கள் அதிகம்.

ரயில் ஏறி வாழ்க்கையில்
முன்னேறியவர்கள்தான்
இந்த உலகில் அதிகம்.
ரயில் பயணம் போல்
எல்லோருடைய வாழ்க்கைப்
பயணமும் அமைய வேண்டும்.

**வாழைமரம்**

*முற்கனிகளில்*
*ஒன்றாம் வாழை பழம்*
*அதை, தருகின்ற*
*தாயாம் வாழைமரம்.*

*பூவும் மருந்துக்கு*
*உதவுமாம்.*
*அதன் இழையும்*
*மனிதருக்கு பயன்படுமாம்...!*

*சுவைக்க சுவைக்க*
*தெகிட்டாத கனியாம்*
*வாழைப்பழம்*

*திருமண வீட்டில்*
*வரவேற்கும்*
*மரண வீட்டில்*
*வழி அனுப்பும்*

*வாழையடி வாழையாக*
*வாழ்க என்று வாழ்த்துக்*
*கூறும் வாழைமரம்*

எமது நாட்டின்
செல்வ மகள்
வாழைமரம்.
இந்த வாழை மரத்துக்கு
ஆசியாவே தாய் நாடாம்.

## நீர்

*கிணற்றிலே உனக்கு*
*அமைதி*
*கடலிலே அடங்காத*
*ஆர்ப்பரிப்பு*
*மலையில் இருந்து*
*விழுந்தால் அருவி*
*நீ அசைந்து சென்றால்*
*ஆறு*
*பாய்ந்து சீறினால்*
*வெள்ளம்*
*தாமரையில் பட்டும் படாத*
*நீராய்...!*
*விவசாயிகளின் தோழனாய்...!*

*உலகில் முற்கால் பாகம்*
*நீதான்...!*

*நீ குதித்தால் அலை*
*கொதித்தால் சுனாமி*
*நீ வானில் இருந்து*
*வராவிட்டால்*
*எங்கள் கண்களில்*
*தாரை தாரையாய்*
*கண்ணீர் மழை.*

*மலையில் பிறந்து*
*நதியில் வளர்ந்து*
*கடலில் சங்கமிக்கும்*
*நீ, எங்களுடன்*
*சங்கமிப்பது எப்போது...!*
*நீ(ர்) இன்றி அமையாது*
*உலகு.*

**தேசம்**

*எழுதுவதற்கு பேனா*
*இருந்தும்*
*விரல்களில் சக்தி*
*இல்லை.*
*அழுவதற்கு காரணம்*
*இருந்தும்*
*கண்ணில்*
*கண்ணீர் துளிகள்*
*இல்லை.*
*பட்டினித் துயரில் நாடு*
*வறுமையில் மக்கள்*
*பகலும், இரவும்*
*இப்போதெல்லாம் நரகமாக*
*தீர்வுகள் எல்லாம்*
*கானல் நீராய்*
*துயரங்கள் எல்லாம்*
*மரணங்களாக...!*

## வாலிபம்

எங்கேயோ போகின்றது
என் பயணங்கள்
எதை நேசித்தோ செல்லும்
என் இரவுகள்
வாழ்ந்திட துடிக்கும்
என் வாலிபத்தில்
எத்தனையோ
கரடு, முரடான
பாதைகள்
வாலிப வயதினிலே
எத்தனையோ வெறுமை
உணர்வுகள்
வாழும் இந்த பூமியிலே
துரோகத்தின் வாசனைகள்
வெயில் பால்
குடித்த இந்த உடல்
தாங்கி நிற்பது
தினம் தினம்
துன்பம் தானோ...!
வந்து செல்லும் சோகம்
எல்லாம்
என்னைக் கொல்லும்
தலைவிதி தானோ...!

**உயிர் உள்ளவரை**

*கண்களில் அவள்*
*கனவுகளில் அவள்*
*எனக்கென சேமித்தேன்*
*இதயத்திலே...*

*கனவுகள் அனைத்தும்*
*அவள் என நினைத்து*
*தினம் தினம் நான்*
*தொலைந்தேன்*

*பாலைவன உலகில்*
*என்னை*
*வெறுமனே துடித்திட*
*ஏன் வைத்தாய் அன்பே...!*

*உன் காதலால்*
*என் கண்களை*
*உயிரோடு தீயினில்*
*ஏன் எரித்தாய்...!*

*எனைத் தேடி நான்*
*உன் இதயத்தில் தேட*
*எனைத் தாண்டி நீ*
*என்னை விட்டுச் செல்ல*

*இது காதலா...!*
*இல்லை காவியமா...!*
*பதில் சொல்லு*
*என்னவளே.*

## தனி மரம்

வயது செல்லச் செல்ல
ஏதோ நான் முதுமை
அடைவது போலும்
எண்பதுகளில் இருப்பது போலும்
தோன்றுகின்றது.
பத்தில் அநாதையாய்
பதிமூன்றில் படிப்பிழந்து
பதினாறில் உறவுகள் இழந்து
திருடி அடிவாங்கி
அநாதை என்பதால்
உன் கவிதைகள் எல்லாம்
குப்பைகளாகி...
காதல் மட்டும்
இவனுக்கு விதி விலக்கா
என்று அழுது
வாழ வேண்டிய
வாலிபம் கல்லறையில்
கனவாகி...!
முப்பது கடந்து நீ
இதுதான் உலகம் என
இதற்கு விதி என்று
பெயர் இட்டாய்
இறந்த காலத்தில் கடந்தவையெல்லாம்
நினைத்து கண் கலங்கியதோடு...!
கனவிலிருந்து எழுவாய்
உலகில் தனி மரமாய்.

## தாரம்

*மனைவியை தாய்மைக்கு*
*சமமாக என்னுபவன்*
*எவனும் அவளை*
*காயப்படுத்த விரும்பமாட்டான்*

*ஆயிரம் உறவுகள்*
*இருந்தாலும்*
*நீ என்னவன்*
*என அவள்*
*உன்னை மார்போடு சாய்த்து*
*இதயத்தை நனைக்கிறாளோ...!*
*அன்பானவள் அவளே...!*
*உன் தாரமே.*

*உன் அன்பான*
*உறவில் உருக்கமாக*
*உருகிப் போகிறது*
*என் இதயம்*

*தாயின் பாசமே*
*இன்று உன்னால்*
*கிடைக்கும் போது*
*என் வாழ்க்கையே*
*வசந்தம் ஆனதடி...!*

பிறக்கும் போது தாய்
இல்லாதவன் இறக்கும் போது
தனக்கான தாயை
காட்டி விட்டு இறக்கின்றான்



ஆசிரியர் பற்றி...

எனது அயல் நாடான இயற்கை வளம் நிறைந்த இலங்கை நாட்டிலே அம்பாரை மாவட்டத்தில் மருதமுனை எனும் கிராமத்தில் பிறந்தவர்தான் கவிஞர் மலீஸ் அமீன்.

இவரின் கவிதைகளை நான் வாசிக்கும் போது உலகில் நடக்கும் யதார்த்தமான விடயங்களை இவரின் கவிதைக்குள் அடக்குவதில் சிறந்த ஆளுமை புலப்படுகிறது.

கவிஞர் மலீஸ் அமீனை ஒரு சமூக சேவையாளராகவும் நான் கண்டது அவரின் முகநூல் பதிவில் இருந்துதான்.

இவரின் இரண்டாவது கவிதை நூலான "கருவறைக் காதல்" இத்தொகுப்பில் ஒவ்வொரு கவிதைகளும் இவரின் வரிகளில் உயிர் பெறுகிறது. எளிமையான மொழிநடை மேலும் கவிதைகள் சிறப்படையச் செய்கின்றது.

இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவில் தமிழ்நாட்டில் இவரது கவிதைகள் "படைப்பு" "தமிழ் நெஞ்சம்" போன்ற பத்திரிகைகள் "ஆனந்த விகடன்" சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

இவர், ஒரு சிறந்த விளையாட்டு வீரரும் கூட, தன் தாய் நாட்டின் வலிகளை வார்த்தைகளில் வடித்த மிகச் சிறந்த கவிஞர் "மலீஸ் அமீன்" இவர் மென்மேலும் இலக்கியத் துறையில் வளர என்னுடைய அன்பான வாழ்த்துக்கள்.

அன்புடன்

சுமதி மணி . அ
(கவிதாயினி , எழுத்தாளர்)
தென்காசி
தமிழ்நாடு
இந்தியா
*2022.08.12*

Printed By :
KIDZMATE
Merry Selection - Maruthamunai
Tel : 076 495 499 3

ISBN 978-624-98342-1-7

Rs. 500.00